**சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை நிதியம் - 2017**

-----------------------------------------------------------------------------------------------

சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று நிதிய மாற்றல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய சட்டத்தின் 10(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2014 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கடப்பாடுகள் என்பவற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

------------------------------------------------------------

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

--------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகை, வருமான செலவினக் கணக்கு ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் அத்துடன் மூலாதாரங்களுக்கு ஏற்புடைய ஏதேனும் செம்மையாக்கல் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

**2. நிதிக் கூற்றுக்கள்**

------------------------------------------

**2.1 மறுப்பு அபிப்பிராயம்**

--------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

2017 ஆம் ஆண்டில் பாடசாலை கொடி தினத்தை முன்னிட்டு அச்சிடப்பட்ட ரூபா 25 வீதம் விற்பனை செய்யப்படும் 49,400 கொடிகள் மற்றும் ரூபா 10 வீதம் விற்பனை செய்யப்படும் 926,600 சிறிய கொடிகளுமாக ரூபா 10,501,000 பெறுமதியான கொடிகள் 191 சாசன ஆரக்ஷன சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. சாசனாரக்சக சபைகளுக்கு வழங்கப்பட்ட அக்கொடிகள் சமயப் பாடசாலைகளுக்கு பகிந்தளித்ததற்கான தகவல்கள் சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டல நிதியத்திடம் இல்லாதிருந்ததுடன் பிரதேச சமஸ்த லங்கா சாசனாரக்சக சபைகளின் கொடி விற்பனை அறிக்கைகளை நிதியத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2017 ஆம் ஆண்டில் கொடி விற்பனை வருமானமாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 5,442,172 பெறுமதியின் சரியானதன்மையை கணக்காய்வின் போது திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 395(இ) இன் பிரகாரம் வங்கிக் கணக்கொன்றினைக் கொண்டுள்ள ஒவ்வொரு நிறுவனத்தினாலும் ஒவ்வொரு மாத இறுதியிலும் உள்ள கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அடுத்தவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் வங்கி கணக்கிற்காக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் மிகை ரூபா 317,489 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 9,644,078 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 9,961,567 ஆன வீழ்ச்சியொன்றாக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக கொடி விற்பனை வருமானம் ரூபா 4,493,263 ஆல் குறைவடைந்திருந்தமை மற்றும் மீளாய்வாண்டில் நன்கொடைகள் கிடைக்காமை இதற்கான பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு வரை நாடு முழுவதும் மொத்த சமயப் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை இரண்டு மில்லியனைத் தாண்டியுள்ளது. மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் அரைப்பங்கிற்கும் குறைவாக மீளாய்வாண்டில் அச்சிடப்பட்டிருந்த ரூபா 10,501,000 பெறுமதியான 926,600 கொடிகளில் ரூபா 5,442,170 பெறுமதியான கொடிகளை மாத்திரம் விற்பனை செய்யக கூடியதாக இருந்தன. மேலும் கொடி தினத்தை முன்னிட்டு எவ்வித விளம்பர நிகழ்ச்சிகளையும் செயற்படுத்துவதற்கும் நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பௌத்த பிக்குகளின் பெற்றோருக்கு உபகாரம் அளிக்கும் நோக்கில் ''புது புத் மாபிய பாரய'' என நிதியமொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் நிதியத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் போதியளவில் மேற்கொள்ளப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்நிதியத்தின் மீதி ரூபா 7,247,312 வரை அதிகரித்திருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்கமுடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் சமஸ்த லங்கா சாசனாரக்சக சபைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நோக்கங்களை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 (ஆ) மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் கௌரவ தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | திட்டமிடல் | சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நோக்கங்களை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சமயப் பாடசாலைகள் கொடி அச்சிடலும் விற்பனையும் | அச்சிடப்பட்ட கொடிகளுக்காக தொடரிலக்கம் இடப்படாமை மற்றும் விற்பனை செய்யப்படாமல் எஞ்சிய கொடிகளை மீள ஒப்படைக்கப்படாமை, அறிக்கையிடல், கிடைத்த மற்றும் பெறவேண்டிய வருமானத்தை சரியாக கணக்கிடுவதற்காக நடைமுறையொன்று காணப்படாமை. |